## கல்வி

### ஆங்கில வகுப்புகள்

நீங்கள் ஆங்கில மொழி வகுப்புகளில் கலந்து கொள்ளவும் விண்ணப்பிக்கலாம். ஆக்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், மேல்நிலைப் பள்ளிகள், வீட்டு ஆசிரியர்கள் மற்றும் சமூக கல்வி மையங்களை உள்ளிட்டு, ஆங்கில வகுப்புகளை கற்பிக்கும் பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. இந்தப் பயிற்சிகளில் கலந்து கொள்ள நீங்கள் ஒரு கட்டணை செலுத்தலாம்.

உங்கள் அகதி மற்றும் பாதுகாப்புக்கான கோருதல் செயல்முறையிலிருக்கும் போது, உங்களுக்கு வேலைக்கான விசா வழங்கப்பட்டால் இரண்டாம் மொழியாக ஆங்கிலப் பயிற்சியில் கலந்து கொள்வதற்கான அனுமதி மட்டும் வழங்கப்படும் மற்றும் வேறு எந்தப் பயிற்சிக்கும் கிடையாது.

மேலும் விவரங்களுக்கு ஆங்கில மொழி கூட்டாளர்களை http://englishlanguage.org.nz/ என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும்.

### ஆரம்ப மற்றும் மேனிலைப் பள்ளிகள்

நியூசிலாந்தில் 6 மற்றும் 16 வயதுக்கு இடைப்பட்ட அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு செல்லவேண்டும். அடைக்கலம் கோருவோரின் குழந்தைகளுக்குப் பொதுவாக மாணவர் விசா வழங்கப்படும்.

## சுகாதாரம்

நியூசிலாந்தில் பொது சுகாதார அமைப்பு மானியத்தில் சுகாதாரப் பராமரிப்பை அளிக்கிறது. அடைக்கலம் கோருபவர் இதற்கு தகுதி பெறுகிறார்.

மருத்துவரிடம் வருகைக்கான செலவு உங்கள் வயது, இடம் மற்றும் தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொருத்து இருக்கும். 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவரிடமான வருகைகள் இலவசமாகும்.

**மானிய சுகாதாரப் பராமரிப்பைப் பராமரிப்பதற்காக சிகிச்சையகம் அல்லது மருத்துவமனைக்கு உங்களுடன் அகதி மற்றும் பாதுகாப்பு நிலைக்கு ஒரு கோருதலைப் பதிவு செய்துள்ளதை உறுதிப்படுத்துவதற்கான RSBயிடமிருந்தான ஒரு கடிதத்தை நீங்கள் எடுத்து செல்ல வேண்டும்.**

மருத்துவமனைகள் மற்றும் பொது சுகாதார சேவைகள் ஒரு மொழிப்பெயர்ப்பாளரை அளிக்கலாம்.

### அவசர மருத்துவப் பராமரிப்பு

அவசரகாலத்தில் ஒரு ஆம்புலன்ஸில் உங்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கு தொலைபேசி மூலம் 111ஐ அழைக்கவும், அல்லது உங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு நேரடியாக செல்லவும்.

### பொது சுகாதாரப் பரிசோதனை

**ஒரு இலவச பொது சுகாதார பரிசோதனையைப் பெறுமாறு உங்களுக்கு உறுதியாக அறிவுறுத்தப்படுகிறது.** ஒரு சந்திப்பு நேரத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு, கீழுள்ள மையத்தை தொடர்பு கொள்ளவும். மொழிப்பெயர்ப்பாளர்கள் அளிக்கப்படுவார்கள்.

**வெலிங்டன்**
அகதி பொது சுகாதாரம்
தொலைபேசி: 04 570 9002 அல்லது www.rph.org.nz வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

ஒரு இலவச பொது பரிசோதனையை செய்துகொள்ளுமாறு உங்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் குடியமர்வு மருத்துவப் பரிசோதனையை அல்ல என்பதை மனதில் கொள்ளவும்.

## ஆதரவு முகமைகள்

ஆதரவு சேவைகளை வழங்கும் பல முகமைகள் உள்ளன, அவற்றை அடைக்கலம் கோருபவர்கள் அணுகலாம்.

### ஆக்லாந்து ரெ∴ப்யூஜி கவுன்சில் இன்கார்ப்பரேட்டட்

அடைக்கலம் கோருபவர்களுக்கு வசிப்பிட மற்றும் ஆதரவு சேவைகளை வழங்குகிறது.
வலைத்தளம்: http://www.rc.org.nz/index.html

### சேஞ்ச் மேக்கர்ஸ் ரெ∴ப்யூஜி ∴போரம்

சமுதாய மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை மூலம் நியூசிலாந்தில் ஆயுள் முழுவதும் பங்கேற்பதற்கான அகதி பின்புலத்தில் மக்களுக்கு உதவுவதற்காக.
வலைத்தளம்: http://crf.org.nz/

### ரெ∴ப்யூஜிஸ் ட்ரோமா ரெக்கவரி

சித்ரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு மனநல சேவைகளை அளிக்கிறது.
வலைத்தளம்: http://www.refugeetraumarecovery.org.nz
தொலைபேசி: 04 805 0350

### சமுதாயச் சட்டம்

சட்டப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக இலவச ஆரம்ப சட்ட உதவியை அளிக்கிறது.
வலைத்தளம்: http://www.communitylaw.org.nz/

வெலிங்டன் சமுதாய சட்டமையம் குடியமர்வு கேள்விகளுடன் உள்ள மக்களுக்கு நேரடியான ஆலோசனை சேவையை நடத்துகிறது. விவரங்களுக்கு அவர்களின் வலைத்தளத்தைப் பார்க்கவும்: http://www.wclc.org.nz/

### சிட்டிசன் அட்வைஸ் பியூரோ

இலவச தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவை அளிக்கிறது.
வலைத்தளம்: http://www.cab.org.nz/Pages/home.aspx

NEW ZEALAND
IMMIGRATION

# அடைக்கலம் கோருவோர்களுக்கான சேவைகள்

## வெலிங்டன்

நியூசிலாந்தில் அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபருக்கான நிலையைக் கோரும் நபர்களுக்கு ("அடைக்கலம் கோருவோர்" என்று அறியப்படுபவர்கள்) கிடைக்கும் சேவைகள் மற்றும் ஆதரவு பற்றிய தகவல்களை இந்த சிற்றேடு கொண்டிருக்கும்.

MINISTRY OF BUSINESS, INNOVATION & EMPLOYMENT
HĪKINA WHAKATUTUKI
New Zealand Government

## நியூசிலாந்தில் உங்கள் நிலையை உறுதி செய்தல்

நியூசிலாந்தில் நீங்கள் அகதி மற்றும் பாதுகாப்பு கோருதலுக்காக பதிவு செய்துள்ளதை உறுதிப்படுத்தும் ஒரு கடிதத்தை அகதி நிலைக் கிளையிலிருந்து (RSB) பெறுவீர்கள்.

**இந்தக் கடிதத்தை வைத்திருப்பதும் நீங்கள் பிற அரசாங்க முகமைகள், சுகாதாரம் மற்றும் கல்வி அளிப்பவர்கள், மற்றும் சேவை அளிப்பவர்களிடம் செல்லும் போது எடுத்து செல்வது முக்கியமானதாகும்.**

**தேவைப்பட்டால், இந்த சிற்றேட்டில் பட்டியலிடப்பட்டுள்ள அரசாங்க முகமைகளுக்கு நேரடியாக உங்களின் நிலையை அடைக்கலம் கோருவோருக்கான நிலையாக RSB உறுதிப்படுத்தலாம். முகமைகள் RSBஐ இந்த எண்ணில் அழைக்கலாம்: (09) 914 5999 அல்லது மின்னஞ்சல் செய்யலாம்:** RSB@mbie.govt.nz

## மொழி பெயர்ப்பு சேவைகள்

### மொழி இணைப்பு

மொழி இணைப்பு என்பது தொலைபேசி மொழிப்பெயர்ப்பு சேவை என்பது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை கிடைக்கப்பெறும். ஒரு மொழி இணைப்பை குடியமர்வு, உள்நாட்டு வருவாய், உள்நாட்டு விவகாரங்கள், கல்வி, பணி மற்றும் வருவாய், வாழ்க்கைப் பணி சேவைகள் மற்றும் காவல்துறை உள்ளிட்ட அரசு முகமைகளுடன் பேசும்போது பயன்படுத்தலாம். இந்த மொழி இணைப்பைப் பயன்படுத்துவதற்கு உங்களுக்கு தேவையான அரசு முகமைக்கு வருகை தந்து அல்லது ஃபோன் செய்து மொழி இணைப்பையும் நீங்கள் விரும்பும் மொழியையும் கேட்கவும். மேலும் தகவல்களுக்கு மற்றும் பங்கேற்கும் முகமைகளின் முழு பட்டியலுக்கு பார்க்கவும்:

வலைத்தளம்: www.languageline.govt.nz
இலவச தொலைபேசி: 0800 656 656

## அடையாள ஆவணங்கள்

சேவைகளை அணுகுவதற்கு, உங்களுக்கு ஒரு அடையாள ஆவணம் (ID) தேவை. வழக்கமாக, பெரும்பாலான நிறுவனங்களில் உங்கள் அடையாளத்தை நிலைநாட்ட ஒரு பாஸ்போர்ட் போதுமானது.

### அடையாளச் சான்று

உங்களிடம் ஒரு பாஸ்போர்ட் இல்லையென்றால், ஒரு இமிக்ரேஷன் நியூசிலாந்து (INZ) கிளையிலிருந்து ஒரு அடையாளச் சான்றைப் (COI) பெறவும். COI என்பது ஒரு INZயினால் வழங்கப்படும் ஒரு ஆவணம் அது உங்கள் புகைப்படம் மற்றும் உங்கள் பெயர் மற்றும் பிறந்த தேதி போன்ற வாழ்க்கைக் குறிப்புகளையும் கொண்டிருக்கும். ஒரு COIயினால் ஒரு விசாவையும் INZ வழங்கலாம். பணி மற்றும் வருவாய் போன்று பிற முகமைகள் மற்றும் வங்கிகள் COIயை ஒரு அடையாளச் சான்றாக ஏற்கும்.

ஒரு COI சந்திப்பு நேரத்துக்கு விண்ணப்பிக்க அருகில் உள்ள INZ கிளைக்கு வருகை தரவும். கிளைகளுக்கான ஒரு பட்டியலை நீங்கள் INZயின் வலைத்தளத்தில் அறியலாம்: http://www.immigration.govt.nz

## இருப்பிட முகவரி

பெரும்பாலான அரசாங்க முகமைகள் மற்றும் சேவை அளிப்பவர்கள் (வங்கிகள், மின்சாரம் மற்றும் தொலைபேசி நிறுவனங்கள் போன்றவற்றிற்கு) உங்கள் இருப்பிட முகவரி தேவைப்படும். இது உங்களுக்கு விலாசம் குறிப்பிடப்பட்ட ஒரு அதிகாரப்பூர்வ கடிதமாகும் - உதாரணத்துக்கு, ஒரு கோருதலை நீங்கள் பதிவுசெய்துள்ளதை உறுதிபடுத்தும் RSBயின் கடிதமாகும். உங்களின் சரியான முகவரியுடன் ஒரு அதிகாரப்பூர்வக் கடிதம் உங்களிடம் இல்லையென்றால், அதற்காக நீங்கள் RSBயைக் கேட்கலாம்.

### இருப்பிட வசதி

ஒரு இருப்பிட வசதியை நீங்கள் அறிய வேண்டுமென்றால், பல உள்ளூர் செய்தித் தாள்கள், வாடகை இருப்பிடத்தை விளம்பரம் செய்கின்றன - "ஃபிளாட்" அல்லது ஒரு பகிர்ந்து கொள்ளப்படும் வீட்டின் அறை. டிரேட் மீ (www.trademe.co.nz) ஒரு வாடகை இருப்பிட வசதியைக் கொண்டிருக்கும். உங்கள் உள்ளூர் சூப்பர் மார்க்கெட், நூலகம் அல்லது சமுதாய மையம் ஒரு அறிவிப்புப் பலகையைக் கொண்டிருக்கலாம், அதில் மக்கள் அறைகள் மற்றும் ஃபிளாட்டுகளை விளம்பரம் செய்யலாம். ரியல் எஸ்டேட் ஏஜெண்டுகள் மற்றும் வாடகைக்கு விடும் மையங்கள் ஒரு இருப்பிட வசதியை கண்டறிய உங்களுக்கு உதவலாம். இந்த சேவைக்காக அவர்கள் கட்டணம் வசூலிக்கலாம். ஒரு இருப்பிடத்தைக் கண்டறிய நீங்கள் போராடினால் வேலை மற்றும் வருவாயைத் தொடர்பு கொள்ளவும்: www.workandincome.govt.nz

## வங்கி

வரிநோக்கங்களுக்காகவும் ஊதியங்கள் மற்றும் வருமானங்களைப் பெறுவதற்காகவும் ஒரு வங்கிக் கணக்கை நீங்கள் திறக்க வேண்டும். பெரும்பாலான வங்கிகளுக்குத் தேவைப்படுவது:

- **இரண்டு வகையான அடையாள அட்டைகள்**, பாஸ்போர்ட் மற்றும் வாகன ஓட்டுனர் உரிமம் அல்லது பிறப்பு சான்றிதழ், மற்றும்
- **உங்கள் முகவரி சான்று**, அரசாங்க முகமை அல்லது சேவை வழங்குனரிடமிருந்து கடிதம் (உதாரணமாக மின்சார நிறுவனம்)

உங்கள் உள்ளூர் வங்கி அல்லது உங்கள் வேலைக்கு அருகில் உள்ள ஒன்றுக்கு ஒரு கணக்கைத் துவக்குவதற்காக வருகை தரவும்.

## உள்நாட்டு வருவாய்த் துறை

நியூசிலாந்தில் வேலை செய்வதற்கு, அல்லது வேலை மற்றும் வருமானத்திலிருந்து ஆதரவைப் பெறுவதற்கு, உள்நாட்டு வருவாயிலிருந்து (IR) உங்களுக்கு ஒரு வரி எண் தேவைப்படலாம்.

IR எண்ணைப் பெறுவதற்கு ஒரு IR595 படிவத்தை நிரப்பவும். இந்தப் படிவத்தின் பிரதியைப் பெறுவதற்கு, 0800 257 773யில் தொலைபேசியில் அழைக்கவும் அல்லது வலைத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யவும்: www.ird.govt.nz/how-to/irdnumbers. உங்கள் அருகில் உள்ள IR அலுவலகத்திற்கு IR595 படிவத்தைப் பெறுவதற்கு உங்கள் பாஸ்போர்ட் மற்றும் உங்கள் முகவரியின் அடையாள சான்றினை எடுத்துச் செல்லவும். உங்கள் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஒரு IR எண்ணை IR வழங்கும்.

வலைத்தளம்: www.ird.govt.nz
இலவச தொலைபேசி: 0800 377 774

## வேலைவாய்ப்பு

உங்கள் அகதி மற்றும் பாதுகாப்பு கோருதல் செயல்முறையிலிருக்கும் போது உங்களுக்கு வேலைக்கான விசா வழங்கப்பட்டால் உங்களால் நியூசிலாந்தில் வேலை செய்ய முடியும்.

செய்தித்தாள்கள் மற்றும் ஆன்லைன் போன்ற, நீங்கள் வேலையை கண்டறிவதற்கான பல இடங்கள் உள்ளன.

### வலைத்தளங்கள்

பெரும்பாலான வேலைகள் ஆன்லைனில் விளம்பரம் செய்யப்படுகின்றன மற்றும் உங்களின் பிராந்தியம், வகை மற்றும் உங்கள் திறன்கள் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப வேலையைத் தேடுவதற்கான பல்வேறு பயனுள்ள வலைத்தளங்கள் உள்ளன. சில பிரபலமான வலைத்தளங்கள்:
www.seek.co.nz
www.trademejobs.co.nz

### செய்தித்தாள்

செய்தித்தாள்களில் வேலைகள் வழக்கமாக "சிச்சுவேஷன்ஸ்வேகன்ட்" (situations vacant) என்று அழைக்கப்படும் மற்றும் செய்தித்தாள்களில் இவை போன்ற வரி விளம்பரப் பகுதிகளில் தோன்றும்:
தி டாமினியன் போஸ்ட் - www.dompost.co.nz

### அரசாங்க முகமைகள்

பயிற்சிப்பட்டறை, பயிற்சி வாய்ப்புகள், வேலைப்பட்டியல்கள், வேலை தேடுதல் திறன்கள் மற்றும் வாழ்க்கை குறிப்பு எழுதுதல் (CV) போன்ற, ஒரு வேலையைக் கண்டறிவதற்கு உங்களுக்கு உதவும் நடைமுறை ஆலோசனையுடன் வாழ்க்கைப்பணி சேவைகள் மற்றும் வேலை மற்றும் வருமானம் உதவக்கூடும். அவர்களின் வலைத்தளத்திற்கு வருகை தரவும்:
வாழ்க்கைப் பணி சேவைகள்: www.careers.govt.nz
வேலை மற்றும் வருமானம்: www.workandincome.govt.nz

## நிதி ஆதரவு

உங்களிடம் ஒரு செல்லுபடியாகிற மற்றும் தறபோதைய விசா இருந்தால் உங்கள் அகதி மற்றும் பாதுகாப்பு கோருதல் செயல்படுத்தும் போது நியூசிலாந்தின் வேலை மற்றும் வருமானத்திலிருந்து அவசரகாலப் பலன்களை பெறுவதற்கு நீங்கள் தகுதிபெறக்கூடும்.

நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள கிளையில் ஒரு வழக்கு மேலாளரை பார்ப்பதற்காக ஒரு சந்திப்பு நேரத்துக்காக நீங்கள் வேலை மற்றும் வருமானத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

மேலும் தகவல்களுக்கு உங்கள் உள்ளூர் வேலை மற்றும் வருமான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும் அல்லது அவர்களுக்கு 0800 559 009க்கு ஃபோன் செய்யவும் அல்லது அவர்களின் வலைத்தளத்திற்கு செல்லவும்: www.workandincome.govt.nz. நீங்கள் சிறிதளவு ஆங்கிலம் பேசினாலோ அல்லது பேசவில்லை என்றாலோ வேலை மற்றும் வருமானம் தகவல்களை பிற மொழிகளில் வழங்கலாம்:

- மாண்டிரின் - 0800 661 001
- கான்டோனிஸ் - 0800 664 004
- இந்தி - 0800 993 003
- ஃபார்ஸி - 0800 996 006
- அரபு - 0800 668 008
- கிமர் - 0800 994 004
- சோமாலி - 0800 997 007
- பஞ்சாபி - 0800 995 005
- வியட்நாமிஸ் - 0800 665 005